**தெங்கு அபிவிருத்தி அதிகார சபை**
**இல, 54 நாவல வீதி, நாரஹேன்பிட், கொழும்பு-05**

**சுருக்க வரலாறு**

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை 1971 ஆம் ஆண்டு 46ஆம் இலக்கச் சட்டமூலம், அதன் தொடர்ச்சியான திருத்தங்கள் (1975 ஆண்டு 24ஆம் இலக்கச் சட்டமூலம், திருத்தப்பட்ட (விசேட) 1984ஆம் ஆண்டு 45ஆம் இலக்கச் சட்டமூலம், 1986ஆம் ஆண்டு 7ஆம் இலக்கச் சட்டமூலம், 1986ஆம் ஆண்டு 8ஆம் இலக்கச் சட்டமூலம், 1987 ஆம் ஆண்டு 40ஆம் இலக்கச் சட்டமூலம், 12-05-2003ஆம் திகதி திருத்தப்பட்டு விநியோகிக்கப்பட்ட இணைப்பு) மற்றும் 31-12-1979ஆம் திகதி இல 64/4 கொண்ட பிரத்தியேக வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றுக்கமைய தனது செயற்பாடுகள், நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதற்கேற்ப, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை, இத்தொழிற்துறையுடன் தொடர்பான ஒழுங்கமைப்பு அதிகாரம், மேற்பார்வை, ஆட்சி, வழிகாட்டல், தொழில்நுட்பம், செயற்திட்டங்கள், நிகழ்ச்சிகளுக்கான அநுமதி, என்பவற்றுக்கும் மற்றும் செய்முறை ஒழுங்கு தரக்கட்டுப்பாடு, தரநிர்ணயஉறுதி, உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சந்தை அபிவிருத்தியும் ஆராய்ச்சியும், இத்தொழிற்துறையுடன் தொடர்புடைய கொள்கை வகுப்புகளுக்காக கௌரவ அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல் உட்பட தொடர்பான ஏனைய செயற்பாடுகளுக்கு நிதியுதவி வழங்கவும் அதிகாரம் கொண்டு உச்ச அமைப்பாக விளங்குகின்றது.

தெங்கு அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்படுவதற்கு முன்னர் மேற்படி சட்டமூலத்தின் ஏற்பாடுகளுக்கமைய தெங்குச்சபை ஒன்றிணைக்கப்பட்ட அமைப்பாக இருந்தது. பின்னர் தெங்கு செய்முறை ஒழுங்கு சபை, தெங்குநார் சபை, தெங்கு சந்தைப்படுத்தல் சபை என பன்முகப்படுத்தப்பட்ட மூன்று அமைப்புகளாக விளங்கியது. மேற்குறித்த மூன்று அமைப்புகளும் குறித்த சட்டமூலம் அதன் தொடர்ச்சியான திருத்தங்கள், மற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றுக்கேற்ப கூட்டிணைக்கப்பட்ட உச்ச நிறுவனமாக, தற்போதைய தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை 1980ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

மேலும், அது நேரடி செயற்பாட்டு நடைமுறைகள், மேற்பார்வைப் பொறுப்புக்கள், ஒழுங்கமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கும், தொழிற்துறையின் செயற்திட்ட நடைமுறை தரக்கட்டுப்பாடு, தரநிர்ணயம் என்பவற்றுக்கான வசதிகளை வழங்கவும், மற்றும் சிறிய, நடுத்தர பெரிய தொழில் அதிபர்களுடன் தொடர்பான சந்தைப்படுத்தல் உட்பட இத்தொழிற்துறையின் அனைத்து மட்டச் செயற்பாடுகளுக்கான அதிகாரத்தையும் கொண்டதாக விளங்குகின்றது.

**பிரதான பிரிவுகள் / பகுதிகள்**

**செயற்பாட்டுப் பிரிவுகள்**

- சந்தை அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி
- செய்முறை அபிவிருத்தி

- தரக்கட்டுப்பாடு மற்றும் தர உறுதி

**சேவைப் பிரிவுகள்**

- நிர்வாகப்பிரிவு
- நிதிப்பிரிவு

**நிறுவன நோக்கங்கள்**

- தெங்குத் தொழிற் துறையுடன் தொடர்பான கொள்கைத் திட்டங்களின் உருவாக்கத்திற்கும் அபிவிருத்தி முன்னுரிமைகளின் தீர்மானத்திற்கும் அவசியமான ஆலோசனைகளையும், உதவிகளையும் அமைச்சருக்கும், அமைச்சுக்கும் வழங்கல்

- நீண்டகால நோக்கில், தெங்குத் தொழிற்துறையை வர்த்தக ரீதியில் சாத்தியமுள்ளதாகவும், இலாபமளிக்கத் தக்கதாகவும். நிலைத்திருக்கத் தக்கதாகவும் ஆகக் கூடியவாறு, அபிவிருத்தி செய்தல்.

- வீட்டுப் பாவனைத் தேவைகளுக்குரிய தேங்காய்கள், தேங்காய் எண்ணெய் என்பவற்றை சாதாரண விலைகளில் கிடைப்பதை உறுதிப்படுத்தல்.

- வீட்டுப்பாவனைகளின் போது ஏற்படும் விரயங்களைக் குறைத்து, தொழிற்துறைச் செயற்பாடுகளுக்கான தேங்காய்கள் கிடைப்பதை அதிகரித்தல்.

- தெங்கு உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி தொடர்பாக உற்பத்தி - சந்தைப்படுத்தல் என்பவற்றின் ஆகக்கூடிய பன்முகத்தன்மையை அடைந்துகொள்ளல்.

- குறித்த காலப்பகுதியில் ரூ 20 பில்லியன், முதல் ரூ 40 பில்லியன் வரையான தெங்கு உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியின் மூலம் ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்ளல்.

- கிராமிய மட்டத்தில் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குவதன் மூலம் உள்@ர் தலா வருமானத்துக்கு ஆகக்கூடிய பங்களிப்பை வழங்குதல்.

- உயர்தரம் மிக்க தெங்கு உற்பத்திகளை ஊக்குவித்தல்.

**நிறுவனச் செயற்பாடுகள்**

- தேவைப்படும் தரத்தைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்காக, செயற்படும் பிரிவுகளையும், தெங்கு உற்பத்தி மாதிரிகளையும் சோதனையிடல்.

- ❖ அவசியமான தரநிர்ணயத்தைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்காக, ஏற்றுமதிக்கென அனுப்பப்படும் தெங்கு உற்பத்திப் பொருட்களின் மாதிரிகளைப் பரிசோதித்தல்.
- ❖ ஏற்றுமதி பொருட்தொகுதிகளுக்கு தரச் சான்றிதழ்கடை வழங்குதல்.
- ❖ தெங்கு உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக, தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
- ❖ பூரணமான மற்றும் நவீன செயற்பாட்டு தொழிற்சாலைகளை உருவாக்குவதற்குரிய தொழில்நுட்ப உதவி, நிதியுதவிகளை வழங்குதல்.
- ❖ பெறுமதிசேர் தெங்கு உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதற்குரிய தொழில்நுட்ப உதவிகளையும், நிதியுதவிகளையும் வழங்குதல்.
- ❖ தேங்காய், மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் தொடர்பான நடப்பு சந்தைத் தகவல்களை தெங்குக் கைத்தொழிற் துறைக்கும், வர்த்தகத்துக்கும் வழங்குதல்.
- ❖ தேங்காய் மற்றும் கொப்பரா என்பவற்றுக்கான ஏலவிற்பனைகளை நடத்துவதன் மூலம், உள்ளூர், மற்றும் ஏற்றுமதிச் சந்தை வழிமுறைகளுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்தல்.
- ❖ வர்த்தகச் சந்தைகள், கண்காட்சிகள் என்பவற்றிற் பங்கேற்பதன் மூலம், தெங்கு உற்பத்திப் பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை மேம்படுத்தல்.
- ❖ செயற்படு கார்பன் மற்றும் பெறுமதிசேர் செயற்படு கார்பன் தொழிற்துறையின் மேற்பார்வை நடவடிக்கைகளை செயற்படுத்தல்.

**தொடர்பு கொள்ள வேண்டியவர்கள்**

| | பெயர் | தொடர்பு இல. | தொலைநகல் | இணையதளம் |
|---|---|---|---|---|
| தலைவர் : | பீ.கே.யூ. புரசிங்க | 0112502501 | 0112508729 | chairmancda@sltnet.lk |
| பணிப்பாளர் நாயகம் : | | 0112508730 | 0112368214 | dgcda@sltnet.lk |

**பொது தொலைபேசி இலக்கங்கள் :** **011-2502502-4, 011-2368284-5, 0112-2368982-3**

**இணைய தளம்** **www.cda.lk**